# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 02 வெள்ளிக்கிழமை 16.06.2023 கதிர் 05



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


# முடிந்தால் எம்மைக் கைது செய்து காட்டுங்கள் பார்ப்போம்! சரத் வீரசேகரவிற்கு செல்வம் எம்.பி. பகிரங்கச் சவால்!



தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை முடிந்தால் கைது செய்து காட்டுங்கள் பார்க்கலாம்! என சரத் வீரசேகரவிற்கு, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பகிரங்கமாகச் சவால் விடுத்துள்ளார்.

நல்லிணக்கத்தைக் குழப்பும் வகையில் செயற்படுகின்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என சரத் வீரசேகர அண்மையில் கூறியிருந்த கருத்திற்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் இன்று இடம்பெற்ற நிகழ்வின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சரத்வீரசேகர கடந்த காலங்களில் பல கருத்துக்களைக் கூறியுள்ளார். மாகாணசபை முறையையும் இல்லாது ஒழிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கையை முன்வைத்துள்ளார், என்றும் குறிப்பிட்டார்.

சரத் வீரசேகர இராணுவத்தில் றொட்டி சுட்டுக்கொண்டா இருந்தார்? என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

ஏனெனில் மக்களது பிரச்சினை என்பது காலம் காலமாக இருந்து வரும் பிரச்சினை. மக்கள் தங்களது பிரச்சினைகளைப் பேசுவதற்காகவே எங்களை நாடாளுமன்றம் அனுப்புகிறார்கள். தங்களுக்கான அநீதிகளை சுட்டிக்காட்டுவதற்காகத்தான் தமது பிரதிநிதிகளை நாடாளுமன்றம் அனுப்புகிறார்கள்.

தங்களது தேசத்து மக்களது பிரச்சனைகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசுகிறார்கள். இவர் யார்? தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கைது செய்து சிறையில் அடைக்கச் சொல்வதற்கு? இவருக்கு என்ன உரிமை இருக்கிறது? முடிந்தால் அதைச் செய்து பார்க்கட்டும். சும்மா இராணுவத்தில் இருந்து விட்டு வந்து கொக்கரிக்க கூடாது எனவும், அவர் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

எனவே, அவருக்கு சவால் விடுகின்றேன். மக்கள் நலன் சார்ந்து பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களை கைது செய்யுங்கள் பார்க்கலாம்!, அப்படி நடந்தால், அடுத்து என்ன நடக்கும் என அப்போது பார்ப்பீர்கள்! எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

## குருந்தி விகாரைக் காணிகள் பகிர்வு இதுவரை அவ்வாறான தீர்மானமில்லை

### ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு!



குருந்தூர் மலையில் அமைந்துள்ள குருந்தி விகாரை இலங்கையர்களின் முக்கியமான தொல்பொருள் தளம் எனவும், குருந்தி விகாரைக்குச் சொந்தமான அரச காணிகளை ஏனையோருக்கு வழங்குவதற்கு எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருந்தி விகாரைக் காணிகளை 4 ➤

## அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வாவினால் காங்கேசனில் பயணிகள் முனையம் திறப்பு




இலங்கை துறைமுக அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட காங்கேசன்துறை நவீன பயணிகள் முனையம், இன்றைய தினம் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வாவினால் வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர், யாழ் இந்தியத் துணைத் தூதுவர், கப்பல்துறை அமைச்சின் செயலர், துறைமுகங்கள் அதிகார சபையின் அதிகாரிகள், வட பிராந்திய கடற்படைத் தளபதி, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், கடற்படை உயர்

4 ➤

## வலி வடக்கு காணி அளவீடு தொடர்பில் மக்கள் பரபரப்படைய தேவையில்லை!

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



வலி வடக்கில் உள்ள தனியார் காணிகளை சட்ட ரீதியாக மக்களிடம் கையளிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவுள்ள காணி அளவீடுகள் தொடர்பில் மக்கள் பரபரப்படையத் தேவையில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு தொடக்க விழாவின் பிரதம விருந்தினராக இன்று கலந்து கொண்டு நூற்றாண்டுச் சின்னத்தினை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2013 ஆண்டு இராணுவத்தினரின் பயன்பாட்டிற்காக அரசுடமையாக்கும் நோக்கில் வர்த்தமானி வெளியிடப்பட்ட சுமார் 6300 ஏக்கர் காணிகளில் கணிசமானவை தற்போது விடுவிக்கப்பட்டு காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

எனினும், குறித்த காணிகள் சட்ட ரீதியாக அரச காணிகளாகவே இப்போதும் காணப்படுகின்றமையினால், 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சட்ட வர்த்தமானியை மீளப் பெறுகின்ற வகையில் புதிய வர்த்தமானி வெளியிட வேண்டியிருக்கின்றது.

இது தொடர்பாக, அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் விரிவாக

4 ➤

## வவுனியாவில் கோர விபத்து தாயும் மகளும் பரிதாபச் சாவு மோதிய ஹண்டரை மக்கள் எரிக்க முயன்றதால் பதற்றம்



வவுனியா, கண்ணாட்டிப் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர்.

இன்று காலை 7 மணியளவில் கண்ணாட்டிப் பகுதியில் இருந்து பூவரசங்குளம் பாடசாலைக்குச் செல்வதற்காகக் குறித்த தாயும் மகளும் அவர்களது வீட்டுக்கு முன்பாக உள்ள வீதியில் பஸ்சுக்காகக் காத்திருந்தபோது, வவுனியாவில் இருந்து மன்னார் நோக்கி வேகமாகப் பயணித்த ஹண்டர் ரக வாகனம் வீதியை விட்டு இறங்கி கரையில் நின்ற அவர்கள் மீது மோதியது.

இந்தக் கோர விபத்தில் தாயும் மகளும் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர். அதே பகுதியைச் சேர்ந்த சிவலோகநாதன் சுபோகினி (வயது 36), அவரது மகளான சிவலோகநாதன் டினுசிகா (வயது 6) ஆகியோரே இதன்போது உயிரிழந்தனர்.

விபத்து இடம்பெற்றபோது ஹண்டர் ரக வாகனத்தில் மூவர் பயணித்திருந்தனர். விபத்தையடுத்து அவர்கள் தப்பிச் சென்ற நிலையில் இருவரை ஊர் மக்கள் துரத்திப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை, விபத்தையடுத்துப் பொறுமை இழந்த பொதுமக்கள் டிப்பர் வாகனத்தைச் சராமரியாகத் தாக்கிச் சேதப்படுத்தியதுடன் அதனை எரிப்பதற்கும் முற்பட்டனர். இதனால், குறித்த பகுதியில் குழப்பமான சூழல் ஏற்பட்டிருந்ததுடன் மன்னார் வீதியூடான போக்குவரத்தும் சில மணிநேரங்கள் பாதிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் நிலைமையைக் கட்டுப்படுத்தியதுடன் விபத்து தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# யாழ்ப்பாணத்தில் சிறுதானியங்களின் உணவுக் கண்காட்சியும் விற்பனையும்





சிறுதானிய உணவினை ஊக்குவிக்கும் கண்காட்சியும் விற்பனையும் யாழ்ப்பாணம் திருநெல்வேலி அமைந்துள்ள விவசாயத் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது.

சிறுதானிய உணவினை ஊக்குவிக்கும் நாள் என்ற தொனிப்பொருளில் குறித்த கண்காட்சி வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப் பட்டது.

சிறுதானிய உணவுகளான கம்பு, திணை, வரகு, சாமை என பல வகையான சிறுதானியங்களில் இருந்து உணவுகளைத் தயாரிப்பது என்பது தொடர்பான விவரங்களும், அவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட தயாரிக்கப்பட்ட உணவுகளும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டன.

சிறு தானிய தானியங்களும், அவற்றைக்கொண்டு உற்பத்தியாக்கப்பட்ட உணவுகளும் அங்கு விற்பனை செய்யப்பட்டதோடு, அவற்றின் ஊடாக ஏற்படும் போஷாக்கு நிலைமைகள் தொடர்பாகவும் இதன்போது காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

நிகழ்வில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் பயனாளிகள் பொதுமக்கள் என மேலும் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு தொடக்க விழா இன்று




யாழ்ப்பாணம் - கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு தொடக்க விழா (1923 - 2023) இன்று காலை 7 மணியளவில் நடைபெற்றது.

கலாசாலையின் நூற்றாண்டு நினைவுச் சின்னம் திறந்து வைக்கப்பட்டது. நூற்றாண்டு தொடர்பான சின்னங்கள் பொறிக்கப்பட்ட மேலாடையும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், கலாசாலை அதிபர் லலீசன், கலாசாலையின் முன்னாள் அதிபர்களான வே.கா. கணபதிப்பிள்ளை, வீ.கருணலிங்கம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டார்.

# இலங்கை வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் கனடியத் தமிழர்கள் 7 மில்லியன் ரூபா உதவி

கனடியத் தமிழர்கள் 7 மில்லியன் ரூபா பெறுமதியான உயிர்காக்கும் மருந்துகளை வவுனியா வைத்தியசாலைக்கு நன்கொடையாக வழங்குகின்றனர். இது தொடர்பான ஊடக அறிக்கையொன்றை கனடிய தமிழர் பேரவையினர் வெளியிட்டுள்ளனர்.

கனடியத் தமிழ் பேரவை ஆண்டு தோறும் தமிழ் கனடியர்களின் நிதி சேர் நடை ஊடாக பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடைகளை வழங்கி வருகிறது. இலங்கையின் மோசமான நிதிச் சரிவால் உயிர்காக்கும் மருந்துகளின் பற்றாக்குறையை நாட்டிலுள்ள அனைத்து மருத்துவமனைகளும் அதிகளவில் எதிர்கொண்டு வருகின்றன.

இந்தச் சூழலைக் கருத்தில் கொண்டு மனிதநேய அடிப்படையில் கடந்த ஆண்டு செப்டம்பர் 11 ஆம் திகதி கனடியத் தமிழர் பேரவையின் 14 ஆவது ஆண்டு தமிழ் கனடியர் நிதி சேர் நடை ஏற்பாடு செய்யப்பட்டு அதில் திரட்டப்படும் நன்கொடை மூலம் இலங்கையில் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் தெற்கு ஆகிய நான்கு பிராந்தியங்களில் உள்ள ஆறு மருத்துவமனைகளுக்கு உயிர்காக்கும் மருத்துவப் பொருட்களை வழங்குவது எனத் திட்டமிடப்பட்டது.

இந்த நன்கொடையின் நான்காம் கட்டமாக கனடிய தமிழர் பேரவையால் ஒழுங்கமைக்கப்பட்ட நான்காம் தொகுதி மருந்துப் பொருட்கள் யூன் 16 வெள்ளிக்கிழமை 4 மணியளவில் வவுனியா வைத்தியசாலைக்கு கையளிக்கப்படவுள்ளது, என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் கனடியர் நிதி சேர் நடை தொடர்பான தகவல்களை tamilcanadianwalk.ca என்ற இணையத்தளத்தினூடகப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் குழு மோதல் 28 பேர் மீதான தடை நீக்கம் மூவருக்கு தொடர்கிறது



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் ஏற்பட்ட குழு மோதல் சம்பவத்தின் அடிப்படையில் உள் நுழைவுத் தடை விதிக்கப்பட்டிருந்த மாணவர்களில் 28 பேர் மீதான தடை பூர்வாங்க விசாரணைகளின் முடிவில் நீக்கப்பட்டுள்ளதுடன், அடையாளப்படுத்தப்பட்ட மூன்று மாணவர்கள் மீது தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பரிந்துரைக்கப்பட்டுமுள்ளது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்களின் “மாகோஸ்” வார நிகழ்வுகள் கடந்த மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் - இம்மாதம் 3ஆம், 4ஆம் திகதிகளில் இரண்டாம் வருட மாணவர்களுக்கும், மூன்றாம் வருட மாணவர்களுக்கும் இடையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் ஏற்பட்ட தகராறு கைகலப்பாக மாறி மோதலில் முடிந்தது.

இதனால், மூன்றாம் வருட மாணவர் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக்கும், மூன்றாம் வருட மாணவர்கள் 15 பேருக்கும் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், விடுதி உட்பட பல்கலைக் கழகத்தின் எந்தவொரு பகுதியினுள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான பூர்வாங்க விசாரணைகள் கடந்த வாரம் இடம்பெற்றன. விசாரணைகளின் முடிவில் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்கள் 3 பேரைத் தவிர ஏனைய 28 பேர் மீது விதிக்கப்பட்டிருந்த உள்நுழைவுத் தடை விலக்கப்பட்டுள்ளது, என்று முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பா.நிமலதாசன் அறிவித்துள்ளார்.

பூர்வாங்க விசாரணைகளின்போது அடையாளப்படுத்தப்பட்ட மாணவர்கள் பல்கலைக் கழக மாணவர் வதிவிடம் மற்றும் ஒழுக்கம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விதிமுறைகளுக்கு அமைவாக, பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையினால் முறையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், பூர்வாங்க விசாரணைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் பேரவைத் தீர்மானத்துக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

# பொலன்னறுவையில் துப்பாக்கிச் சூடு பெண்ணொருவர் படுகொலை!

திருமணமாகிக் கணவனைப் பிரிந்து வாழ்ந்த வந்த பெண் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பொலனறுவை மாவட்டம், மெதிரிகிரிய பிரதேசத்தில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த துப்பாக்கிச்சூட்டில் மிரிசேன மீனவ கிராமத்தில் வசிக்கும் 36 வயதுடைய பெண் உயிரிழந்துள்ளார்.

தாய் வீட்டுக்குச் சென்றுவிட்டு தனது வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, அவரது தாய் வீட்டின் முன் மறைந்திருந்த நபர் ஒருவர் குறித்த பெண்ணை நோக்கித் துப்பாக்கியால் சுட்டுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த பெண் மெதிரிகிரிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

பிரிந்து சென்ற கணவருடன் ஏற்பட்ட தகராறு காரணமாகத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம், என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். துப்பாக்கிச்சூடு நடத்திய சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளதுடன், அவரை கைது செய்வதற்கான விசாரணைகளை மெதிரிகிரிய பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட - maalaikkathir@gmail.com

# அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை புரட்டியெடுத்தது சூறாவளி பலர் பாதிப்பு




அமெரிக்காவின் வடக்கு டெக்சாஸ் நகரத்தின் வழியாக வீசிய சூறாவளியால், பல மாகாணங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. நேற்று, உள்ளூர் நேரப்படி 5 மணியளவில் சூறாவளி தாக்கியதாக அமெரிக்க தேசிய வானிலைச் சேவை தெரிவித்துள்ளது.

சூறாவளியால் பாதிக்கப்பட்டு இறப்புக்கள் சம்பவித்துள்ளதாகவும், ஆயினும் அவற்றின் எண்ணிக்கையை கணக்கிடமுடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. சூறாவளியின் தாக்கத்திற்குட்பட்டு, தகவல் தொடர்புக் கோபுரங்களும் வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

சூறாவளியின் தாக்கத்திற்குள்ளான பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு உதவுவதற்காக அவசரகால குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட 75 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தெற்கு பசிபிக் பெருங்கடலில் நிலநடுக்கம் சுனாமி அச்சுறுத்தல் இல்லை என அறிவிப்பு



தென் பசிபிக் பெருங்கடலில் டோங்கா அருகே 7.2 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. குறித்த நிலநடுக்கமானது இன்று காலை பதிவாகியுள்ளது.

டோங்காவிற்கு தென்மேற்கே 280 கிலோமீற்றர் தொலைவில், 167.4 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் தோன்றியுள்ளதாக ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அமெரிக்காவின் மேற்குக் கடற்கரை, பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் அலாஸ்காவிற்கு சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை, என்று அமெரிக்க சுனாமி எச்சரிக்கை அமைப்பு தெரிவித்துள்ளது.

அவ்வாறே, அவுஸ்திரேலியாவிற்கும் சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை என அவுஸ்திரேலியாவின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நிலநடுக்கவியல் மையமானது, பிஜி தீவுகளின் தெற்குப் பகுதிக்கு அருகேயும் நிலநடுக்கம் 7 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது எனத் தெரிவித்திருந்தமை கவனிக்கத்தக்கது.

# பிரான்ஸின் மக்களுக்கு காட்டுத்தீ எச்சரிக்கை



பிரான்ஸின் சில மாவட்டங்களில் காட்டுத் தீ பரவ ஆரம்பித்துள்ளதால் ஐந்து மாவட்டங்களுக்கு செம்மஞ்சள்நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் காட்டுத் தீயைக் கணிக்கும் கருவி நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் முதன் முறையாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸின் மியூஸ், மொசெல்லே, மீர்தே-எட்-மொசெல்லே, பரிஸ் மற்றும் ஹவுட்ஸ்- டி-செய்னி ஆகிய மாவட்டங்களுக்கும் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையைக் கவனத்தில் கொண்டு, பாதுகாப்பாக இருக்குமாறு அதிகாரிகள் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# யூடியூப் நிறுவனத்தின் புதிய அறிவிப்பு

உலகின் பிரபல சமூக வலைதளமான யூடியூப், இனிவரும் காலங்களில் ஒரு தளத்தில் 500 சந்தாதாரர்கள் (Subscribers) இருந்தாலே அந்தத் தளத்துக்குப் பார்வைகளுக்கான பணத்தை வழங்கும் என்ற மகிழ்ச்சியான அறிவிப்பினை விடுத்துள்ளது.

அந்தவகையில், யூடியூப் இல் 1000 சந்தாதாரர்கள் மற்றும் 4000 பார்வை நேரங்கள் இருந்தால் மட்டுமே பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்ற நிலை காணப்பட்டது. தற்போது, 500 சந்ததாரர்கள் இருந்தாலே பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்த அறிவிப்பு தொடர்பில், யூடியூப் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

இந்த வசதி தற்போது அமெரிக்கா, பிரித்தானியா, தாய்வான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு மட்டுமே கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, ஏனைய நாடுகளில் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# கனடாவில் ட்ரக் – பேருந்து மோதி விபத்து 15 பேர் பலி 10 பேர் மருத்துவமனையில்

கனடாவில் ட்ரக் வண்டியும் பேருந்தும் மோதியதில் 15 பேர் இறந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. குறித்த விபத்து நேற்று இரவு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மணிடோபா மாகாணத்தில் முதியோர்களை ஏற்றிக்கொண்டு ட்ரக் வண்டி சென்று கொண்டிருந்தபோது, கனடாவின் காபெரி நகருக்கு அருகே அதன் மீது பேருந்து மோதி விபத்துக்குள்ளானதாகச் செய்திகள் கூறுகின்றன.

விபத்தில் 10 பேர் காயமடைந்துள்ளதாகவும், அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# 39 ஆண்டுகளின் பின் அவுஸ்திரேலியா சாதனை தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கும் அஸ்வின்




உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் நிறைவடைந்த நிலையில் டெஸ்ட் வீரர்களுக்கான தரவரிசையை ஐசிசி வெளியிட்டுள்ளது. இதில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் முதல் மூன்று இடங்களையும் பெற்று அவுஸ்திரேலியா சாதனை படைத்துள்ளது.

இந்தியாவுக்கு எதிரான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் அபாரமாக விளையாடிய டிராவிஸ் ஹெட் 3 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளதுடன் அதே போட்டியில் சதம் விளாசிய ஸ்டீவ் ஸ்மித் தொடர்ந்தும் 2 ஆவது இடத்தில் உள்ளார். இவர்களுடன் மாரன்ஸ் லபுசேன் 903 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார்.

இந்நிலையில், 39 ஆண்டுகளுக்கு பிறகு ஒரே அணியைச் சேர்ந்த மூன்று துடுப்பாட்ட வீரர்கள் முதல் மூன்று இடங்களைப் பிடித்து அவுஸ்திரேலியா சாதனை படைத்துள்ளது.

இதேவேளை, உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடாவிட்டாலும் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் 860 புள்ளிகளுடன் ரவிச்சந்திரன் அஸ்வின் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார். சகல துறை வீரர்களுக்கான தரவரிசையில் இந்திய அணியின் ரவீந்திர ஜடேஜா மற்றும் ரவிச்சந்திரன் அஸ்வின் முதல் இரண்டு இடங்களிலும் உள்ளனர்.

# மெக்சிக்கோவில் அதிகரித்த வெப்பநிலை வீடுகளுக்குள் முடங்கிக்கிடக்கும் மக்கள்



மெக்சிக்கோவில் வெப்பநிலை 45 பாகை செல்சியசைத் தாண்டியிருப்பதால் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இந்த அதீத வெப்பத் தாக்கமானது 15 நாட்களுக்கு மேல் நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால், மெக்சிக்கோ மக்களின் நடமாட்டம் குறைந்துள்ளதோடு, பலரும் கடற்கரைகளை நாடிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ரணிலின் பதவிக் காலத்திலேயே வடக்கு கிழக்கில் தொல்லியல் இடங்கள் அழிப்பு: உதய கம்மன்பில

குருந்தூர்மலை விகாரை உட்பட வடக்கு, கிழக்கில் அமைந்துள்ள தொல்லியல் இடங்களை பாதுகாக்க வேண்டியிருப்பது பிரிவினைவாதிகளிடமோ, அடிப்படைவாதிகளிடமோ இருந்து அல்ல, தற்போதைய அரசாங்கத்திடம் இருந்தே என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தொல்லியல் திணைக்களம் மற்றும் வன பாதுகாப்பு அதிகாரிகள் கடமைகளை செய்ய முயற்சிக்கும்போது பிரிவினைவாதிகளான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்குத் தடையேற்படுத்துவதாக தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குருந்தூர் மலை உட்பட வடக்கு,கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க தொல்லியல் இடங்கள் தொடர்பில் கட்சியின் தலைமையகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், குருந்தி விகாரை சம்பந்தமாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் முன்வைத்த விடயங்கள் பொய்யானவை என்பதை ஒப்புவிப்பதற்காக தான் உட்பட கட்சியின் ஏனைய பிரதிநிதிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி அங்கு செல்ல உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

வரலாறு பற்றி துளியும் அறிவில்லாத, தம்மை அறிவாளிகள் என காட்டிக்கொள்ளும் நபர்களிடம் இருந்து எமது உரிமைகளை பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் தொல்லியல் இடங்கள் அழிக்கப்பட்டுள்ளமை குறித்து விசாரணை நடத்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்குமாறு கோரி தாங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி சபாநாயகரிடம் யோசனை ஒன்றைக் கையளிக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காலஞ்சென்ற முன்னாள் அமைச்சர் சிறில் மெத்தியூ, யுனேஸ்கோ அமைப்பிடம் அனுப்பிய கடிதத்தில் வடக்கு, கிழக்கில் தொல்லியல் முக்கியத்துவமிக்க 27 இடங்கள் இருப்பதாக அறிவித்திருந்தார்.

ஆனால், தற்போது தொல்லியல் பெறுமதிமிக்க இடங்கள் அதனை விட அதிகரித்துள்ளன. இவற்றை அழிவுக்கு உட்படுத்துவதற்காக அரச அதிகாரிகள் நீதிமன்றங்களில் பொய்யான அறிக்கைகளை வழங்கி வருகின்றனர்.

இவற்றையெல்லாம் நாம் அமைதியாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தால், ஜனாதிபதி, தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளராக சாணக்கியன் இராசமாணிக்கத்தையும் கலாசார அமைச்சராக எம்.ஏ.சுமந்திரனையும் நியமிக்கவும் வாய்ப்புள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



ரணில் விக்ரமசிங்க பிரதமராகப் பதவி வகித்த காலங்களிலேயே வடக்கு, கிழக்கில் உள்ள தொல்லியல் இடங்கள் அழிக்கப்பட்டன. இதனால், அவர் தலைமை தாங்கும் அரசாங்கத்திடம் தொல்லியல் இடங்களை பாதுகாக்க ஒப்படைப்பது, நரியிடம் கோழியை வழங்கியமைக்கு ஈடானது எனவும் அவர் கூறியிருக்கிறார்.

## அமைச்சர் நிமால் சிறி பால டி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இன்றைய தினம் இந்தியாவில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகளுடன் ஒரு கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது. கப்பலில் வந்தடைந்த இந்தியாவைச் சேர்ந்த சுற்றுலா பயணிகளை அமைச்சர் அடங்கிய குழாம் வரவேற்றதோடு கப்பலின் கப்டனுக்கு நினைவுப் பரிசிலும் கையளிக்கப்பட்டது.

காங்கேசன்துறைக்கும் இராமேஸ்வரத்துக்கு இடையில் பயணிகள் கப்பல் சேவையினை ஆரம்பிப்பது தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களுக்கு இடையில் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

எனினும், இராமேஸ்வரப் பகுதியில் சில வேலைத்திட்டங்களை கப்பல் சேவை ஆரம்பிக்க முன்னர் முன்னெடுக்க வேண்டிய தேவையும் உள்ளது. இதன் காரணமாக தற்போதைய சூழ்நிலையில் உடனடியாக கப்பல் சேவையினை ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுகின்றது, என்று குறித்த நிகழ்வில் கருத்து தெரிவித்த கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வா குறிப்பிட்டார்.

எனினும், இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களின் தொடர் முயற்சியின் பயனாக விரைவில் கப்பல் சேவையை ஆரம்பிக்க கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## குருந்தி விகாரைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வெளி நபர்களுக்கு வழங்கக் கூடாது என எல்லாவல மேதானந்த தேரர் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்ததையடுத்தே, அதற்குப் பதில் வழங்கும்வகையில் ஜனாதிபதி செயலகம் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளது.

குருந்தி விகாரைக்குச் சொந்தமான அரச காணிகள் தொடர்பில் கடந்த 8 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், ஜனாதிபதி வெளியிட்ட கருத்திற்கு எதிர்ப்பு வெளியிடும் வகையில், தொல்பொருள் ஆய்வாளர் கலாநிதி எல்லாவல மேதானந்த தேரர், ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

குருந்தி விகாரைக்குச் சொந்தமில்லாத காணியை பொதுமக்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், விகாரையைச் சுற்றிலும் பல இடங்களில் பல்வேறு பௌத்த விகாரைகளின் இடிபாடுகள் உள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் தேரர் குறிப்பிட்டிருந்தார். ஆகவே, தற்போது அரச காணியைப் பகிர்ந்தளித்தால், தவறான முறையில் காணிகைப்பற்றப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டக் கூடும் என்பதால், இந்தக் காணிகளைப் பகிர்ந்தளிக்காதிருக்குமாறும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கடிதம் தொடர்பில், ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய செயலாளர் சமன் ஏக்கநாயக்க, நேற்றைய தினம் எல்லாவல மேதானந்த தேரருக்கு விளக்கமளித்து பதில் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

வடக்கு, கிழக்கில் நிலவும் காணி பிரச்சினைகளுக்கு தீர்வாக, 1985 ஆம் ஆண்டின்போது, காடு மற்றும் வனவிலங்கு வலயங்களாக இருந்த காணிகள், அவ்வாறே பாதுகாக்கப்பட வேண்டும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதியின் செயலாளர் விளக்கமளித்துள்ளார்.

# மண் மாபியாக்களுக்கு அனுமதி வேண்டாம்! மட்டக்களப்பில் மக்கள் கவனயீர்ப்பு போராட்டம்



மட்டக்களப்பு - போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திக்கோடை பிரதேச மக்களால் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டம் நடைபெறவிருந்த நிலையில், போரதீவுப்பற்று பிரதேச கலாசார மண்டபத்திற்கு முன்பாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமது பூர்வீக எல்லைகளை மாற்றியமைக்க வேண்டாம் என கூறியும், மக்கள் குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சேதனப்பசளை உற்பத்தி நிலையத்தினை இடமாற்ற வலியுறுத்தியும், அரச காணிகளை அபகரிப்பதை தடுத்து நிறுத்துமாறு கோரியும் சட்ட விரோத மண் மாபியாக்களுக்கு அனுமதி வழங்க வேண்டாம் என வலியுறுத்தியும் இந்தப் போராட்டத்தினை மக்கள் முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்ட இடத்திற்குச் சென்ற இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், இரா.சாணக்கியன் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடினர்.

பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்வினை வழங்குவதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்திலும் கலந்து கொண்டு தமது கருத்துகளை முன்வைத்தனர்.

இது தொடர்பில் ஆராய்ந்த அபிவிருத்துக்குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும், குறித்த பகுதியில் உள்ள சேதனப்பசளை உற்பத்தி நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றவும், எல்லை மீள் நிர்ணய செயற்பாட்டு மற்றும் காணி தொடர்பான புனரமைப்புப் பணிகளை நிறுத்தவும் தீர்மானித்ததோடு, சட்ட விரோதமான முறையில் காணி அபகரிப்புச் செய்யப்படுவது குறித்து முறையான விசாரணைகளை முன்னெடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளனர்.

# ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான திகதிகள் !

2023 ஆம் ஆண்டுக்கான ஆசியக் கிண்ண ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடத்தப்படும் திகதிகள் ஆசிய கிரிக்கெட் சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி முதல் செப்டம்பர் 17ஆம் திகதி வரை இந்த போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இவற்றில், 4 போட்டிகள் பாகிஸ்தானிலும், 9 போட்டிகள் இலங்கையிலும் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




இம்முறை ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் மோதவுள்ளன.

இதேவேளை, இந்தத் தொடரில் மொத்தமாக 13 போட்டிகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வலி வடக்கு காணி அளவீடு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கலந்துரையாடிய நிலையில், 2013 வர்த்தமானியை மீளப் பெறுவதற்கும், தற்போதும் விடுவிக்கப்படாமல் இருக்கின்ற காணிகளில் முடிந்தளவு காணிகளை விடுவிப்பதற்கும் காணி அளவீடுகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே காணி அளவீடுகள் மேற் கொள்ளப்படும் போது மக்கள் பரப்படையத் தேவையில்லை, என்று அமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.06.2023இல் வெளியிடப்பெற்றது.